ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதிவிசேஷமானது

අංක 2309/18 - 2022 දෙසැම්බර් මස 06 වැනි අඟහරුවාදා - 2022.12.06
**2309/18 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 06 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை**

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) – பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சட்டம்**

*92 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டத்தின் 92 ஆம் பிரிவின் கீழ், எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம், நீர் வழங்கல் அமைச்சர், கலாநிதி கெஹெலிய ரம்புக்வெல்ல ஆகிய நான், குறித்த சபைக்கு றுவன்வெல்ல நீர் வழங்கல் செயற்திட்டத்தின் கீழ் நீர் சுத்திகரிப்பு வளாகத்திலுள்ள தடுப்பு சுவரின் ஸ்தீரத்தன்மையை பாதுகாத்தல் மற்றும் வேலைப் பொறுப்பதிகாரிக்குரிய உத்தியோகபூர்வ விடுதியை நிர்மாணிப்பதற்காக காணிப்பகுதியொன்றினை சுவீகரித்துக்கொள்வதற்கான தேவை ஏற்பட்டுள்ளமையினால் இங்கு கீழ்க் காணப்படும் அட்டவணையில் குறித்துக்காட்டப்பட்டுள்ள காணிப்பகுதியின் வழியுரிமையை சுவீகரித்துக்கொள்வதை இக்கட்டளையினூடாக அனுமதிக்கின்றேன்.*

*கலாநிதி* **கெஹெலிய ரம்புக்வெல்ல,**
*நீர் வழங்கல் அமைச்சர்.*

தொடர்பு இல. : DVP/02/04/KE/524
*நீர் வழங்கல் அமைச்சு,*
*35, "லக்திய மெதுர",*
*புதிய பாராளுமன்ற வீதி,*
*பெலவத்தை,*
*பத்தரமுல்லை,*
*2022, நவெம்பர் 24.*

1A – G38266 – 10 (2022/12)
*இவ் அதிவிஷேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**அட்டவணை**

கேகாலை மாவட்டத்தில், றுவன்வெல்ல பிரதேச செயலகப் பிரிவில் இலக்கம் 103ஏ, மொரளிய கிராம உத்தியோகத்தர் பிரிவில் மொரளிய கிராமத்தில் அமைந்துள்ள திட்ட உருவரையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள மொரளிய வத்த றுவன்வெல்ல கொடச என்றழைக்கப்படுகின்ற காணியிலிருந்து சுமார் 25 பேர்ச் விஸ்தீரணத்தையுடைய பின்வரும் எல்லைகளுக்குள் அமைந்துள்ள காணிப்பகுதி.

வடக்கு : நீர் சுத்திகரிப்பு நிலையம் (இலக்கம் MP/2650 சுவீகரித்தல் முன்மொழிவினூடாக அரசாங்கத்திற்கு சுவீகரித்துக்கொள்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள காணி).
கிழக்கு : பிரதேச சபை வீதி
தெற்கு : குறித்த காணியின் எஞ்சிய பகுதி
மேற்கு : குறித்த காணியின் எஞ்சிய பகுதி

காணிக்கு உரிமை கோருபவரின் பெயரும் முகவரியும் : 01. பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சு மற்றும் மல்வத்தை பெருந்தோட்ட நிறுவனம்.
இலக்கம் 280, டேம் வீதி, கொழும்பு 12.

EOG 12 - 0081